விடுமுறையில் வந்தபோது சோகம்

கட்டிலில் இருந்து தவறி விழுந்த கடலோர காவல்படை வீரர் திடீர் சாவு

திருவில்லிபுத்தூர், ஆக. 9– வத்திராயிருப்பு அருகே, கட்டிலில் இருந்து தவறி விழுந்த கடலோர காவல் படை வீரர் திடீரென இறந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு அருகே உள்ள மேலக்கோபாலபுரம் பகுதியைச் சேர்ந்தவர் அன்னபாக்கியம். இவரது மகன் இன்பத்தமிழன் (29). இவர், ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இந்திய கடலோர காவல் படை வீரராக பணியாற்றி வந்தார். இவருக்கு திருமணமாகவில்லை. கடந்த 3 மாதங்களாக ஒடிசாவில் சிறப்பு பயிற்சி முடித்து விட்டு, விடுமுறையை கழிக்க கடந்த 3ம் தேதி சொந்த ஊருக்கு வந்தார். நேற்று முன்தினம் இரவு வீட்டிற்குள் தூங்கியபோது கட்டிலில் இருந்து தவறி கீழே விழுந்து மயங்கிக் கிடந்துள்ளார். இதைப் பார்த்த அவரது குடும்பத்தினர், அவரை மீட்டு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இன்பத்தமிழன் ஏற்கனவே இறந்ததாக தெரிவித்தனர். இது குறித்து வத்திராயிருப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து இன்பத்தமிழனின் மரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஊட்டி ரோஜா பூங்காவில் சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்வதற்காக ரோஜா நாற்றுகளை உற்பத்தி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

ராமேஸ்வரத்தில்

வீடியோ வெளியிட்டு வாலிபர் தற்கொலை

வைரலாவதால் பரபரப்பு

ராமேஸ்வரம், ஆக. 9– ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் உள்ள புதுரோடு நடராஜபுரத்தை சேர்ந்தவர் நம்புகுமார் (26). இவருக்கு நித்யா என்ற மனைவியும், குழந்தையும் உள்ளனர். நான்கு நாட்களுக்கு முன்பு நம்புகுமார் தனது டூவீலரில் சென்ற போது, தனுஷ்கோடி போலீசார், அவரது வாகனத்தை பறித்துக்கொண்டு, அனுப்பியதாக கூறப்படுகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் நம்புகுமார் தனக்கு சொந்தமான மற்றொரு வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்தார். இதையறிந்த அக்கம்பக்கத்தினர் அவரது உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக ராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதனிடையே, நம்புகுமார் தற்கொலை செய்வதற்கு முன்பு, தான் பேசிய வீடியோ ஒன்றை தனது நண்பர்களுக்கு வாட்ஸ் அப்பில் அனுப்பியுள்ளார். இது வைரலாக பரவி வருகிறது. அந்த வீடியோவில்,

நம்புகுமார்.

'தனுஷ்கோடி போலீசார் எனது டூவீலரை பறித்துக் கொண்டு தரமறுகின்றனர். இதனால், மன உளைச்சல் ஏற்பட்டு, தற்கொலைசெய்கிறேன்' என தெரிவித்துள்ளார். இது குறித்து தனுஷ்கோடி போலீசாரிடம் கேட்டபோது, 'கடந்த 4ம் தேதி நம்புகுமார் குடிபோதையில் டூவீலரை ஓட்டி வந்தார். வண்டியை நிறுத்தி சோதனை செய்தபோது, அதில் அரிவாள் இருந்தது. இதனால், வாகனத்தையும், அரிவாளையும் பறிமுதல் செய்தோம்' என்றனர்.

காதலி வாங்கி தந்த டூவீலர்

இதனிடையே, நம்புகுமார் தான் குடியிருந்த பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்ணை திருமணத்துக்கு முன்பு காதலித்ததாக கூறப்படுகிறது. அந்தப்பெண் அவருக்கு டூவீலர் வாங்கிக் கொடுத்துள்ளார். அந்தப் பெண் இறந்த நிலையில், அவரது நினைவாக டூவீலரை நம்புகுமார் வைத்துள்ளார். இதை போலீசார் பறித்துக் கொண்டு தராததால், விரக்தியடைந்து தற்கொலை செய்ததாக கூறப்படுகிறது.

பேராசிரியர் கொலை வழக்கு

நெல்லை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றத்தில் ராக்கெட் ராஜா ஆஜர்

போலீசார் குவிப்பு

நெல்லை, ஆக. 9– ஆள் மாறாட்டத்தில் பேராசிரியர் கொலை செய்யப்பட்ட வழக்கில் விசாரணைக்காக நெல்லை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றத்தில் பனங்காட்டு படை கட்சி நிறுவனத் தலைவர் ராக்கெட் ராஜா நேற்று காலையில் ஆஜரானார். இதனால் நெல்லை நீதிமன்றத்தில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், கொடியன்குளத்தை சேர்ந்தவர் குமார் (61). இவர் புதிய தமிழகம் கட்சியிலிருந்து விலகி அதிமுகவில் சேர்ந்தார். தொடர்ந்து பாளை. அண்ணா நகர் பகுதியில் புதிய வீடு கட்டி மனைவி, மகள் அனுசுயா, மருமகன் செந்தில்குமார் ஆகியோருடன் வசித்து வந்தார். இவரது மருமகன் செந்தில்குமார் தனியார் இன்ஜினியரிங் கல்லூரியில் பேராசிரியராக பணி புரிந்து வந்தார்.

கடந்த 2018ம் ஆண்டு பாளை. அண்ணா நகரில் உள்ள வீட்டில் கொடியன்குளம் குமாரை ஒரு கும்பல் வெடிகுண்டு வீசி கொல்ல முயற்சித்தது.

இதில் அவர் தப்பிச் சென்றார். ஆனால் வீட்டிற்குள் நின்ற அவரது மருமகன் பேராசிரியர் செந்தில்குமார் ஆள் மாறாட்டத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

இது குறித்து பாளை. போலீசார் வழக்கு பதிவு செய்து பனங்காட்டு படை கட்சித் தலைவர் ராக்கெட் ராஜா, வக்கீல் பாலகணேசன் உள்ளிட்ட 14 பேரை கைது செய்தனர்.

இது குறித்த வழக்கு நெல்லை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. பேராசிரியர் செந்தில்குமார் கொலை வழக்கு, நாங்குநேரி சாமித்துரை கொலை வழக்கு உள்ளிட்ட வழக்குகளில் ராக்கெட் ராஜாவை போலீசார் குண்டர் சட்டத்தில் கைது செய்து சென்னை புழல் சிறையில் அடைத்தனர். கடந்த சில நாட்களுக்கு முன் அவர் குண்டர் சட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில் பேராசிரியர் செந்தில்குமார் கொலை வழக்கு நெல்லை வன்கொடுமை தடுப்பு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணைக்காக கேரளாவில் இருந்து கேரவன் காரில் ராக்கெட் ராஜா நேற்று நெல்லை வந்தார். பின் நீதிபதி பத்மநாபன் முன்னிலையில் ராக்கெட் ராஜா, வக்கீல் பாலகணேசன் உள்பட 14 பேர் நேற்று ஆஜராகினர்.

இக்கொலை வழக்கு தொடர்பான சாட்சி ஆவணங்களை போலீசார் நேற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர். இதை தொடர்ந்து வழக்கு விசாரணையை செப்.11ம்தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார். ராக்கெட் ராஜா நேற்று நீதிமன்றத்தில் ஆஜரானதை தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள் நீதிமன்றத்தில் திரண்டிருந்தனர். இதையொட்டி நெல்லை நீதிமன்ற வளாகத்தில் போலீசார் குவிக்கப்பட்டிருந்தனர்.

சூரியனை ஆய்வு செய்யும்

ஆதித்யா திட்டம் ஓராண்டில் நிறைவேற வாய்ப்பு

விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தகவல்

திருவெறும்பூர், ஆக. 9– திருச்சியில் இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை நேற்று அளித்த பேட்டி:

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் நிலவுக்கு செல்வதற்காக இந்தியாவை நாடியுள்ளது. சந்திரயான்–3 பூமியை தாண்டி நிலவின் சுற்றுவட்ட பாதையை அடைந்துள்ளது. தற்போது முக்கியமான கட்டத்தை தாண்டி நிலவின் நீள்வட்ட பாதையில் நிலை நிறுத்தியுள்ளனர். பாகங்கள் பிரிக்கப்பட்டு விக்ரம் லாண்டர் பிரிந்து வருகிற 23ம் தேதி நிலவின் தரையை தொடும். அதை தொடர்ந்து சந்திரயான் விண்கலம் தானாக நிலவுக்கு தகுந்தாற்போல் வேகத்தில் செல்லும். அப்போது நிலவில் உள்ள மண்ணின் தன்மை, வெப்பநிலையை ஆய்வு செய்யும். தற்போது சந்திரயான்– 3 நிலவின் படத்தை எடுத்து அனுப்பியுள்ளது. ஆம்ஸ்ட்ராங் நிலவில் இறங்கியகால் தட படத்தை அமெரிக்கா எடுத்ததுபோல் இந்தியாவின் விக்ரம் லாண்டரின் சக்கரதடத்தை நாம் பார்ப்பதற்கான சாத்தியம் உள்ளது.

அமெரிக்காவின் நாசா மீண்டும் நிலவுக்கு மனிதர்களை அனுப்ப முடிவெடுத்துள்ளது. அந்த திட்டத்தில் சர்வதேச அளவில் மற்ற நாடுகள் இணைந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணுகின்றனர். ஏனென்றால் அந்த திட்டம் மிகப்பெரிய திட்டம். மனிதர்கள் அங்கு வாழ்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கவும், அங்கு சர்வதேச விண்வெளி மையம் அமைக்கவும் திட்டமிட்டுள்ளனர். நமது பிரதமர் மோடி அமெரிக்கா சென்றபோது அந்த திட்டத்தில் இந்தியா இணைய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா திட்டம் முன்னெடுப்பில் உள்ளது. ஓராண்டில் சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா திட்டம் நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளது. இவ்வாறு கூறினார்.

கொடுமுடி விற்பனை கூடத்தில்

ரூ. 40.14 லட்சத்துக்கு தேங்காய், கொப்பரை ஏலம்

கொடுமுடி, ஆக. 9– கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், தேங்காய் காய்கள் 13,407 வரத்தாகின. எடை 50.06 குவிண்டால் மதிப்பு ரூ.1,11,263. இது கிலோ ஒன்றுக்கு குறைந்த விலையாக ரூ.17.65க்கும், அதிக விலையாக ரூ.23.90க்கும், சராசரி விலையாக ரூ.22.55க்கும் ஏலம் போனது. கொப்பரை தேங்காய் மூட்டைகள் 1,069 வரத்தாகின. எடை 518.04 குவிண்டால் மதிப்பு ரூ.39,03,429. இதில், விற்பனை கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை தேங்காய் ரூ.40,14,692க்கு ஏலம் போனது. கொடுமுடி சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த 200–க்கும் மேற்பட்ட விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரை தேங்காய்களை கிலோ ஒன்றுக்கு முதல் தரம் குறைந்த விலையாக ரூ.77.60க்கும், அதிக விலையாக ரூ.78.99க்கும், சராசரி விலையாக ரூ.78.55க்கும் ஏலம் போனது. இரண்டாம் தரம் குறைந்த விலையாக ரூ. 60.55க்கும், அதிக விலையாக ரூ.78.65க்கும், சராசரி விலையாக ரூ.75.75க்கும் ஏலம் போனது. விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ஜமுனா முன்னிலையில் மொத்தம் 40,14,692 ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றது.

கொடுமுடி சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த கொப்பரை தேங்காய் மூட்டைகள்.

நாகை அடுத்த முட்டத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் பாலம் கட்டும் பணியின்போது இறந்த கண்ணனின் பெற்றோரிடம் ரூ.3 லட்சம் காசோலையை அமைச்சர் ரகுபதி வழங்கினார். அருகில் கலெக்டர் ஜானிடாம் வர்கீஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் கவுதமன்.

மகாராஷ்டிராவில் பாலப்பணியில் இறந்த

வேதாரண்யம் வாலிபர் குடும்பத்துக்கு ரூ. 3 லட்சம் நிதி

அமைச்சர் ரகுபதி வழங்கினார்

நாகை, ஆக. 9– நாகை அடுத்த முட்டம் அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தற்காலிக 3 வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா நேற்று நடந்தது. கலெக்டர் ஜானிடாம் வர்கீஸ் தலைமைவகித்தார். சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் கவுதமன் ஆகியோர் நேற்று திறந்து வைத்தனர்.

விழாவில் அமைச்சர் ரகுபதி பேசியதாவது: முதலாவதாக கல்விக்கும், 2வதாக மருத்துவத்துக்கும் முதல்வர் ஸ்டாலின், முக்கியத்துவம் அளித்து வருகிறார். அரசு பள்ளிகளில் சிறந்ததரமான உயர்ந்தகல்வியை தர வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தலையாய நோக்கமாகும் என்றார்.

இதை தொடர்ந்து நாகையில் செப்டம்பர் 1ம் தேதி முதல் 11ம் தேதி வரை புத்தக திருவிழா நடப்பதால் மாணவர்கள் பணத்தை சேமித்துவைத்து புத்தகங்கள் வாங்க வேண்டும் என்பதற்காக முதற்கட்டமாக 25 பேருக்கு அமைச்சர் ரகுபதி உண்டியல் வழங்கினார்.

இதேபோல் மகாராஷ்டிராமாநிலம்தானேமாவட்டத்தில் பாலம் கட்டும் பணியின்போது ஏற்பட்ட விபத்தில் இறந்தவேதாரண்யம் அடுத்த ஆயக்காரன்புலம் இரண்டாம் சேத்தியை சேர்ந்த கண்ணனின் தாய் வனரோஜாவிடம் முதல்வர் பொது நிவாரண நிதி ரூ.3 லட்சம் காசோலையை வழங்கினார்.

விழாவில் எம்எல்ஏ முகமது ஷாநவாஸ், கூடுதல் கலெக்டர் ரஞ்சித்சிங், நாகை நகர்மன்ற தலைவர் மாரிமுத்து, துணைத்தலைவர் செந்தில்குமார், முதன்மை கல்வி அலுவலர் சுபாஷினி, முட்டம் ஊராட்சி தலைவர் மனோகரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஏற்காட்டில் பரபரப்பு

பள்ளி வகுப்பறைக்குள் புகுந்து மாணவர்கள் மீது தாக்குதல்

தூத்துக்குடி கும்பலுக்கு வலை

ஏற்காடு, ஆக. 9– ஏற்காட்டில் தனியார் பள்ளிக்குள் புகுந்து 12ம் வகுப்பு மாணவர்கள் மீது தாக்குதலில் ஈடுபட்ட தூத்துக்குடி வாலிபர் உள்பட 10 பேர் கும்பலை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் செயல்பட்டு வரும் பிரபல தனியார் பள்ளியில் பல்வேறு இடங்களிலிருந்து மாணவர்கள் படித்து வருகின்றனர். கடந்த 6ம் தேதி இப்பள்ளியில் முதியோர் மற்றும் ஆதரவற்றோருக்கு நிதி திரட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு 10ம் வகுப்பு மாணவர்கள் முன்னதாக சென்றது தொடர்பாக 12ம் வகுப்பு மாணவர்களுடன் பிரச்னை ஏற்பட்டது. இதில், 12ம் வகுப்பு மாணவர்கள் 5 பேர், விடுதி அறைக்கு சென்று 10ம் வகுப்பு மாணவர்களை தாக்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட தூத்துக்குடியை சேர்ந்த மாணவர், தனது பெற்றோருக்கு தகவல் தெரிவித்துள்ளார். உடனே, அன்றிரவே அவரது அண்ணன் வந்து, விடுதியில் இருந்த தம்பியை வெளியே அழைத்துச் சென்றுள்ளார். மறுநாள் உறவினர்கள் 10 பேருடன் பள்ளிக்கு சென்று 12ம் வகுப்பு மாணவர்கள் இருந்த வகுப்பிற்கு சென்று தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இதில், பெங்களூரைச் சேர்ந்த ஒரு சிறுவனுக்கு லேசான காயம் ஏற்பட்டது. இது தொடர்பாக பள்ளி தலைமை ஆசிரியர் கொடுத்த புகாரின்பேரில் தூத்துக்குடி மாணவனின் அண்ணன் மற்றும் அவருடன் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் மீது ஏற்காடு போலீசார் வழக்குப்பதிந்து தேடி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி அருகே

யானை தந்தம் கடத்திய 4 பேர் கைது; 2 டூவீலர்கள் பறிமுதல்

கிருஷ்ணகிரி, ஆக. 9– கிருஷ்ணகிரி அருகே யானை தந்தம் கடத்திய 4 பேரை கைது செய்து, அவர்களிடமிருந்து 2 டூவீலர்களை வனத்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வன உயிரினக் காப்பாளர் கார்த்திகேயனி உத்தரவின் பேரில், கிருஷ்ணகிரி வனச்சரக அலுவலர் ரவி தலைமையில், சென்னை வனவிலங்கு குற்றக் கட்டுப்பாட்டுப் பணியகம் மற்றும் கிருஷ்ணகிரி வனச்சரக வனவர்கள், வனக்காப்பாளர்கள் ஆகியோர் கொண்ட குழுவினர், நாகரசம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது இரண்டு டூவீலரில் சந்தேகத்திற்கிடமாக வந்த 4 பேரை நிறுத்தி, அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தனர். அதில், 2 சிறிய யானை தந்தங்கள் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து யானைத் தந்தங்கள் மற்றும் அவர்கள் ஓட்டி வந்த டூவீலர்களை வனத்துறையினர் பறிமுதல் செய்தனர். யானை தந்தங்களை கடத்தி வந்த பள்ளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (47), நாகரசம்பட்டி செந்தில் (43), நாகப்பன் (68), பெரிய காமாட்சிப்பட்டி வள்ளிகந்தன் (42) ஆகிய 4 பேரை கைது செய்து, அவர்களுக்கு எங்கிருந்து தந்தங்கள் கிடைத்தது என விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிரைம் அர்பன் டெவலப்மென்ட் இந்தியா லிமிடெட்

PRIME URBAN DEVELOPMENT INDIA LTD — we make your dreams come true —

CIN: L70200TZ1936PLC000001

பதிவு அலுவலகம் : கதவு எண்.164/18 மருதாச்சலபுரம் மெயின் ரோடு, ரேஷன் கடை எதிரில், 60 அடி ரோடு, திருப்பூர் - 641 603 (தமிழ்நாடு, இந்தியா)

E-mail: companysecretary@ptlonline.com, Web: www.ptlonline.com

30.06.2023 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்கின் வருமானம் தவிர மற்ற தொகைகள் யாவும் ₹ இலட்சங்களில்)

வ. எண்	விபரங்கள்	Standalone Results			Consolidated Results		
		காலாண்டு முடிவு 30.06.2023 Unaudited	தொடர்புடைய காலாண்டு முடிவு 30.06.2022 Unaudited	ஆண்டு முடிவு 31.03.2023 Audited	காலாண்டு முடிவு 30.06.2023 Unaudited	தொடர்புடைய காலாண்டு முடிவு 30.06.2022 Unaudited	ஆண்டு முடிவு 31.03.2023 Audited
1	செயல்பாடுகளின் மூலம் நிகர வருமானம் மற்றும் இதர வருமானம்	24.65	379.97	472.41	201.38	574.61	1,312.66
2	வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு முன்)	(61.09)	4.57	(110.43)	(58.92)	14.23	(104.57)
3	வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு பின்)	(61.09)	4.57	(110.43)	(58.92)	14.23	(104.57)
4	வரிக்கு பின்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (அசாதாரண செலவினங்களுக்கு பின்)	**(61.09)**	**4.57**	**(51.17)**	**(58.92)**	**14.23**	**(47.66)**
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் மற்றும் வரிக்கு பிந்தைய ஏனைய விரிவா வருமானமும் உள்ளிட்டது)	**(61.09)**	**4.57**	**(50.90)**	**(58.92)**	**14.72**	**(46.56)**
6	செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குத்தொகை (ஒரு பங்கிற்கு ரூ.2/- முக மதிப்பு)	532.87	532.87	532.87	532.87	532.87	532.87
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளது போன்றது)			(502.73)			(704.03)
8	ஒரு பங்கின் வருவாய் (Face Value of Rs.2/- each) not annualised)						
	அ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு முன்பாக	(0.23)	0.02	(0.19)	(0.22)	0.05	(0.18)
	ஆ. ஒரு பங்கிற்கான வருவாய் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்பாக	(0.23)	0.02	(0.19)	(0.22)	0.05	(0.18)

குறிப்பு:

1. தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைத்த நிதி முடிவுகள் இந்தியன் கணக்கியல் தரநிலைகளில் (Ind AS 34) நிறுவனங்கள் சட்டம் 2013-ன் விதிகள் பொருந்தக்கூடிய மற்றும் SEBI (Listing Obligation and Disclosure Requirements) விதிமுறைகள் 2015இன் பத்திரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் அளவீடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை தணிக்கை குழு மதிப்பாய்வு செய்து 2023ம் ஆண்டு ஆகஸ்ட் 8 ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. Regulations 33 of SEBI (Listing and other Disclosure Requirements) Regulations, 2015-ன் படி இந்த முடிவானது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு.
3. மேலே உள்ளவை காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஆகும். இதன் விரிவான முடிவுகளை நிறுவனத்தின் வலைதளமன www.ptlonline.com மற்றும் BSE லிமிடெட் lwww.bseindia.com வலைதளத்திலும் பார்வையிடலாம்.

(For and on behalf of the Board)
புருஷோத்தம்தாஸ் பட்டோடியா
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN 00032088

இடம்: திருப்பூர்
தேதி: 08.08.2023